**மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை - 2022**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான முத்திரைத் தீர்வைத் தொகை ரூபா 29,278,134 இனால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | குறைவாகக் காட்டப்பட்ட தொகையினை சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆண்டுக்கான வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான களஞ்சிய இருப்புத் தொகை ரூபா 895,941 மற்றும் ஆயுர்வேத மருந்துப் பொருள் இருப்புக்கள் ரூபா 866,860 நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை | களஞ்சிய இருப்பினை சொத்தாகச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுக்கு உட்பட்ட காலப்பகுதியில் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 51,150 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இத்தவறினை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆண்டுக்கான வருமானங்கள் உரியவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 11 நூலகங்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 372,213 பெறுமதியான 1,632 புத்தகங்கள் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | நன்கொடைப் புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட வேண்டும். |
| (உ) | திண்மக்கழிவு நிலையத்திலுள்ள பெறுமதி குறிப்பிடப்படாத 31 எண்ணிக்கையான நிலையான சொத்துக்கள், ரூபா 68,012 பெறுமதியான பசளைப் பை இருப்புக்கள் மற்றும் ரூபா 149,700 பெறுமதியான பசளை இருப்புக்கள் ஆகியன நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சொத்தாகச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 26,037,993 பெறுமதியான 09 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்கள், பொறி, மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் வாகனங்களின் உரிமையை மாற்றம் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | சபையினால் கடந்த 10 ஆண்டு காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட ரூபா 1,335,076 தொகை முற்பணக் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | விபரங்களில்லாத முற்பணக் கொடுப்பனவுகளை சீர்செய்வதற்கு திணைக்களத் தலைவரின் ஆலோசனையினைக் கோரியுள்ளோம். | முற்பணக் கொடுப்பனவுகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 7,605,386 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 8,125,623 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,050,000 | 7,342,800 | 6,689,430 | 3,157,670 | 2,550,000 | 5,709,310 | 4,518,360 | 2,504,300 |
| வாடகைகள் | 17,737,000 | 9,085,657 | 17,491,824 | 6,919,645 | 17,737,000 | 20,423,972 | 5,827,642 | 15,325,812 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,825,000 | 2,591,510 | 2,591,510 | -- | 1,200,000 | 2,000,960 | 2,000,960 | -- |
| ஏனைய வருமானம் | 43,610,000 | 55,040,481 | 55,040,803 | 5,005,689 | 83,410,000 | 56,361,682 | 56,966,419 | 5,006,011 |
| | **66,222,000** | **74,060,448** | **81,813,567** | **15,083,004** | **104,897,000** | **84,495,924** | **69,313,381** | **22,836,123** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வியாபார வரி நிலுவைத் தொகையான ரூபா 60,000 கடந்த 2021 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை நிலுவையாகக் காணப்படுகின்றது. | வியாபார வரி நிலுவையினை செலுத்தத் தவறும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வியாபார வரி நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | சபையின் எல்லைக்குட்பட்ட இயங்கி வரும் திரையரங்கிற்கான 2019 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையான களியாட்டவரி நிலுவைத் தொகையான ரூபா 200,000 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திரையரங்கிற்கான களியாட்ட வரி செலுத்துமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், செலுத்தத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | களியாட்ட வரி நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான வாடகை நிலுவைத் தொகையான ரூபா 8,504,005 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் ரூபா 216,750 அறவிடப்பட்டுள்ளது. மிகுதி நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான குத்தகை வருமானம் நிலுவைத் தொகையான ரூபா 6,985,055 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1985-2009 காலப்பகுதிகளில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அறவிடப்படவில்லை. எனவே இது தொடர்பாக திணைக்களத் தலைவருக்கு அறிக்கையிட்டு பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 திகதியின் படி கிடைக்க வேண்டியிருந்த் முத்திரைக் கட்டணம் ரூபா 4,498,191 ஆகும். | 2023 ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான முத்திரைக் கட்டண வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வங்கி நடைமுறைக் கணக்கில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 24 இலிருந்து 34 மில்லியன் தொகையான காசு இருப்புக்கள் காணப்படுகின்ற போதிலும், இந்நிதிகளை வங்கியில் நிலையான வைப்பிலிட்டு வட்டி வருமானத்தினை உழைப்பதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், சபையானது மீளாய்வாண்டில் வட்டி வருமானமாக அண்ணளவாக ரூபா 1.5 மில்லியன் தொகையினை இழந்துள்ளது. | திணைக்களத் தலைவரின் அனுமதியினைப் பெற்று மேலதிகமாக வங்கிக் கணக்கில் உள்ள பணத்தினை நிலையான வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்படும். | முதலீடுகளிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகத்தின் பிரதி பணிப்பாளர் நாயகத்தினால் வெளியீடு செய்யப்பட்ட பொதுச் சுற்றறிக்கை இல.1769 இன் பிரகாரம், பொதுச் சுகாதார பரிசோதகரினால் கட்டடத்தின் கீழ்த்தளத்திற்கு மட்டுமே படம் வரைய முடியும். எனினும், மீளாய்வாண்டில் 02 மாடி கொண்ட 03 கட்டடங்களுக்கான வரைபடமானது, பொதுச் சுகாதார பரிசோதகரால் வரையப்பட்டு இச்சுற்றறிக்கைக்கு முரணான வகையில் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | 02 மாடிக்கட்டடங்களை யார் வரைந்தாலும் குடிசார் எந்திரவியலாளரினால் சிபார்சு செய்யப்பட்டாலே சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையில் கட்டட அனுமதிக்காக வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான கட்டட அனுமதியானது வழங்கப்படாத போதிலும், 06 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக சபையினால் மீளாய்வாண்டில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | அனுமதியின்றி கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு தண்டப்பணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | அனுமதியின்றி கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 53 காணி கட்டடங்கள் மற்றும் 27 மோட்டார் வாகனங்கள் பல வருடங்களுக்கு முன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிலேயே நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டு வருகின்றமையால், நிதிக்கூற்றுக்களில் அவற்றின் நியாயப் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | சொத்துக்களின் நியாயப் பெறுமதியே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையில் பழுதடைந்து காணப்படுகின்ற 02 வாகனங்களை திருத்துவதற்கும், பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்ற 03 வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை திருத்துவதற்கும் மற்றும் திருத்த முடியாத நிலையிலுள்ள வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை திருத்துவதற்கும், பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான பெறுகைகள் திட்டமானது பிரதேச சபை வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாட்டிற்காக தயாரிக்கவேண்டியிருந்தும் சபையினால் வழங்கல்களுக்காக ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கல்களுக்கென தனியான ஒரு பெறுகைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கல் செயற்பாடுகளுக்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 12 பதவிகளுக்கு 27 வெற்றிடங்களும், 12 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றனர். இதனை சீர்செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வெற்றிடமாகவுள்ள ஆளணி தொடர்பாக கோரிக்கை விடப்பட்டும் எவ்விதமான முன்னேற்றமும் எட்டப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **ஊழியர் கடன்** | | |
| சபையினால் 02 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் மற்றும் ஏனைய கடன் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 130,036 தொகையினை கடந்த 07 வருட காலமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த உத்தியோகத்தர்களது மாதாந்த ஓய்வூதியப் பணத்திலிருந்து அறவிடப்பட்டு வருகின்றது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 15(1) உப பிரிவிற்கமைய நிதிக்கூற்றுக்களை அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், இதற்கமைய, 2023 ஏப்ரல் 11 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருந்தும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாத வண்ணம் கவனம் எடுக்கின்றோம். அத்துடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை விரைவாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றோம். | சட்டத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை உரிய காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |